[1979 நவம்பர் 3

திருச்சி விற்பனைக்குழுச் செயலாளர் மீதான குற்றச்சாட்டுகள்

*குறுகிய கால வினா—எண் 2 திரு. க. சுப்பு: மாண்புமிகு வேளாண்மை' பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளியப்பாரா:—

(அ) திருச்சி மார்க்கட் கமிட்டியில் செயலாளராக இருக்கும் திரு. எம். பாலசுப்பிரமணியம் என்பவர் மீது பல்வேறு குற்றச் சாட்டுகளைக் கூறி புகார் மனு ஒன்று அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது?

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) ஆம்.

(ஆ) திருச்சி விற்பனைக் குழுச் செயலாளர் திரு. பாலசுப்பிரமணியம் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் வேளாண்மை விற்பனை இயக்குநர் மூலம் விசாரித்து அறியப் பட்டது, இயக்குநர் அறிக்கையின்படி குற்றச்சாட்டுகள் உண்மைக்கு புறம்பானவை என்றும் ஆதாரமற்றவை என்றும் தெரிய வருகிறது.

பொதுப் பணித் துறையினைப் பிரித்தமைத்தல்

* வினா எண் 81—திரு. எஸ். கணேசன் : மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மாநிலப் பொதுப்பணித்துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) ;

(அ) மற்றும் (ஆ) : இப்பொருள் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. என். கிட்டப்பா : மாநிலத்திலுள்ள பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிக்க அரசு உத்தேசித்துள்ளதாக அமைச்சரின் பேரவைச் செயலர் அறிவித்தார். அதை எந்த வகையில் பிரிக்க உத்தேசித்துள்ளார்கள்? அது குறித்த விவரங்களை அரசு அறிவிக்க இயலுமா?

திரு. எம். வின்செண்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப்பிரிக்க அரசு உத்தேசித்துள்ளது.

திரு. ஆர். மணிமாறன் : இதுவரையில் என்னென்ன முயற்சிகள எடுக்கப்பட்டுள்ளன? இப்படிப்பட்ட பிரிக்கிற நிலை எப்போது இறுதிக் கட்டத்தை எட்டிப்பிடிக்கும் என்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : 1973-ம் ஆண்டு நிர்வாகச் சீர்திருத்தக் குழுவால் பொதுப் பணித் துறை கட்டடப் பிரிவு, பாசனப் பிரிவு என்று இரண்டாகப் பிரிக்கப்படவேண்டும் என்று அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டது. ஆனால் அது அரசாணை ஆக்கப்படாமலிருந்தது. 10-11-1978ல் அரசாங்கம் தலைமைச் செயலாளர் தலைமையில் செயலர் குழு ஒன்றை நிறுவியது. அந்த செயலர் குழுவிடம் அரசு ஒரு அறிக்கையை கேட்டது. செயலர் குழுவும் அரசுக்கு அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளது. தற்போது அமைச்சரவையின் முடிவு எதிர் பார்க்கப்படுகிறது.

திரு. கே. பண்ணை சேதுராம் : மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதானால் நிர்வாகச் செலவு அதிக மாகும் என்பதை அரசு உணருமா? அப்படிப் பிரிப்பதன் உள் நோக்கம் என்னவென்று அறிய விரும்புகிறேன்?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : ஆக்கப் பணிகளைத் துரிதப்படுத்தவும், தேவையற்றச் செலவு களைத் தடுக்கவும் ஒவ்வொரு பிரிவிலும் சிறந்தவர்களாக விளங்கும் அதிகாரிகளின் கீழ் அந்தந்தப் பிரிவு ஆக்கப் பணிகளுக் காக பணிக்கப்படுகிறபோது மேலும் திறன்பட பணிகள் நடக்கும் என்ற நல்லெண்ணத்தில்தான் பிரிக்கப்பட உத்தேசித்துள்ளது.

திரு. க. மருதாசலம் : மாநிலப் பொதுப் பணித் துறையை இரண்டாகப் பிரிப்பதுபோல் மாவட்டத்தில் இருக்கிற பொதுப் பணித் துறைகளையும் இரண்டாகப் பிரித்தால் அங்கு வேலைகள் செவ்வனே நடைபெறுவதற்கு உதவியாகயிருக்குமே. அதையும் பிரிக்க உத்தேசமுண்டா?

திரு. எம். வின்சென்ட் (அமைச்சரின் பேரவைச் செயலர்) : பிரிப்பது மாவட்டங்களின் நலனையும் கருதித்தான்.

வேலை நிதித் திட்டத்தின்கீழ் பணிபுரிந்து வருவோர்.

* வினா எண் 82—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை யளிப்பாரா —

(அ) பொதுப் பணித் துறையில் ''Work charged'' என்ற பெயரில் உள்ள அரசாங்க ஊழியர்களின் மொத்த எண்ணிக்கை தற்பொழுது என்ன?